செனித்
உங்கள் வியாபாரப் பொருட்களை துரிதமாக விற்பனை செய்வதற்கும் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் மூலம் மக்கள் மனதில் நிலை பெறச் செய்வதற்கும்
நாடுங்கள்:
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங்
யாழ்நகர்

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ-1/=

தோலகட்டி நெல்லி ரசம்
மக்கள் மனதில் கடந்த 60 வருட காலமாக நிலைத்த பெயர்
ஏகப் பிரதிநிதிகளும் விநியோகத்தரும்
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங்
யாழ்நகர்

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆடு கார்த்திகை மீ 21உ வெள்ளிக்கிழமை ஹி ஜ்ரி 1406 ற.அவ்வல் பிறை 23 (06-12-1985) UTHAYAN — A LIVELY TAMIL DAILY கதிர்:- 10

★ கூட்டணியின் மாற்று யோசனை இதோ

# தமிழ்ப் பகுதிகள் இணைந்த ஒரே பிரதேச அமைப்பு

## எல்லை வகுப்பதில் கிழக்கின் சில பகுதிகளை விட்டுக் கொடுத்து 4 அம்சங்களுக்கு வடிவமைப்பு

சென்னை டிச. 5

* வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழர் வாழும் பகுதிகள் இணைந்த ஒரே பிரதேச அமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.
* அந்தப் பிரதேசத்தின் எல்லைகளை வகுக்கும்போது கிழக்கின் சில பகுதிகளை தவிர்த்து ஒதுக்கிவிடலாம்.
* அவ்வாறு இணைந்த பிரதேசத்திற்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டும்.
* அதே வேளை திம்பு மாநாட்டில் ஈழ தேசிய விடுதலை முன்னணி சமர்ப்பித்த நான்கு அம்சங்களையும் ஏற்று அங்கிகரித்து அவற்றை வடிவமைத்துச் செயலுருவம் கொடுக்க வேண்டும்.

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்கவென அந்த நாட்டு அரசாங்கம் தயாரித்த நகல் செயல் திட்டத்துக்கு மாற்றுகத் தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்த யோசனைகளில் மேற்கண்டவை முக்கியமானவையாகும் என மிக நம்பிக்கையாகத் தெரியவந்துள்ளது.

இலங்கை ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவை எதிர்வரும்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அதிகாரிகள் இருவர் வேலை நீக்கம்

கொழும்பு, டிச.6

சுங்கத் திணைக்களத்தின் இரண்டு தமிழ் உயர் அதிகாரிகள் நேற்று பதவி நீக்கம் செய்யப்பட்டார்கள்.

சுங்கத் திணைக்கள பிரதி கட்டுப்பாட்டாளர் ஒருவரும் உதவிக் கட்டுப்பாட்டாளர் ஒருவருமே பதவி நீக்கம் செய்யப்பட்டவர்களாவர்.

நீதி அமைச்சு செயலாளரின் பணிப்பின் பேரில் நிர்வாகக் கோவை 19-ஆம் விதியின் கீழ் இவர்கள் இருவரும் பதவி நீக்கப்பட்டார்கள்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வெளிநாட்டுப் பிரஜைகள் ஐவர் நாட்டிலிருந்து 2 கோடி 85 லட்சம் டாலர் பணத்தை கடத்த முயற்சித்தபோது அதற்கு இவர்கள் இருவரும் உதவினார்களாம். இதற்கு போதிய சாட்சியங்கள் இருப்பதாக சுங்கத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவம் தொடர்பாக சுங்கத் திணைக்களம் விசாரணை நடத்தியது. இருவருக்கும் தலா இரண்டு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அபராத தொகையை இருவரும் செலுத்தினர். அதன் பின்னரே இவர்கள் இருவரும் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள்.

## இடம் பெயர்ந்த மாணவரும் பரீட்சை எழுத ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச.6,

திருகோணமலை, வவுனியா மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்து வந்து தற்பொழுது யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்காலிகமாகத் தங்கியிருக்கும் மாணவர்களும் ஜீ.சி.ஈ. பரீட்சை யில் தோற்றுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

இம் மாணவர்களுக்கென புனித மரியாள் றோ.க.த.க. பாடசாலையில் விசேஷ பரீட்சை மண்டபம் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக கல்விப் பணிப்பாளர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் ஜீ. சி. ஈ. சாதாரண பரீட்சைக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் ஒழுங்கு செய்யப்பட்ட நாலு பரீட்சை மண்டபங்களில் 3ஆம், 4ஆம் இலக்க பரீட்சை மண்டபங்கள் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூ

(4-ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. ஆர் டாக்கா பயணம்

கொழும்பு, டிச 6

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று (வியாழக்கிழமை) காலை டாக்கா போய்ச் சேர்ந்தார்.

டாக்காவில் நாளை 7ஆம் திகதி தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு மாநாடு (சார்க்) ஆரம்பமாகின்றது.

அம்மாநாட்டில் கலந்துகொள்ளுமுகமாக வே ஜனாதிபதி சென்று உள்ளார்.

வெளிநாட்டமைச்சர் ஜனாப் சாஹுல் ஹமீது டாக்காவில் தற்போது தங்கியுள்ளார்.

முச்சந்தி முரளி



இன்டைக்கு ரயில் டிக்கெட் எடுக்கிறதுக்குக் காசுக் கட்டளை கேட்பினம், பிறகு காசுக் கட்டளை கொடுக்கிறதுக்கு முத்திரை கேட்பினம். உப்பிடி நாளைக்கு ஓண்டா மனுஷரை உலைக்கினம் பாருங்கோ வேன்.

## பளையில் கைதான அனைவரும் விடுதலை

யாழ்ப்பாணம், டிச 6

செவ்வாய்க்கிழமை பளையில் நடத்தப்பட்ட தேடுதலின் போது கைதான அனைவரும் விடுவிக்கப்பட்டுவிட்டனர்.

ஆயுதப்படையினரால் இவர்கள் அனைவரும் விசாரணைக்காக முகாமுக்கு கொண்டு வரப்பட்டனர்.

## உங்களுக்கு நாய் கடித்ததா? எப்போது?

### யாழ்.ஆஸ்பத்திரிக்கு விரையுங்கள்

யாழ்ப்பாணம், டிச. 6

செப்டம்பர் நடுப்பகுதியில் நல்லூர் கோவிலடியில் நாய் கடித்தவர்கள் உடனடியாக யாழ். பெரியாஸ்பத்திரிக்கு வந்து ஊசி மருந்து ஏற்றிக் கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் சுரேந்திரன் நச்சினார்க்கினியன் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

செப்டம்பர் 20ஆம் திகதி நல்லூர் கோவிலடியில் நாய் ஒன்றினால் கடிபட்டவர் தற்போது பெரியாஸ்பத்திரியில் சிகிச்சைக்கு வந்துள்ளார்.

அவரைக் கடித்தது விசர் நாய் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்தே, யாழ். வைத்திய அத்தியட்சகர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

காசுக்கட்டளை மூலம் டிக்கெட்

## வடக்கு, கிழக்கு மாகாணம் முழுவதற்கும் விஸ்தரிப்பு

### ரயில்வே திணைக்களம் நேற்று முடிவு

கொழும்பு, டிச. 6

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல ரயில் நிலையங்களிலும் பணம் செலுத்தி டிக்கெட் வாங்க முடியாது.

இனிமேல் காசுக்கட்டளைகளை சமர்ப்பித்தே டிக்கெட் வாங்க முடியும்.

ரயில்வே திணைக்களம் இப்படி முடிவு செய்திருக்கிறது.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் டிக்கெட் மூலம் ரயில்வே திணைக்களத்துக்கு வசூலாகும் பணம் அடிக்கடி கொள்ளையிடப்படுவதே இந்த முடிவுக்கு காரணம்.

தலைமன்னார் கொழும்பு

(4-ஆம் பக்கம் பார்க்க)

## சிலாபத்தில் வழி மறிப்பு

யாழ்ப்பாணம், டிச 6

கல்வியங்காடு எரிபொருள் நிலையத்திற்கு கொழும்பில் இருந்து எரிபொருளைக் கொண்டு வந்த லொறி சிலாபத்தில் வைத்து ஆயுதப் படையினரால் மறிக்கப்பட்டது.

சாரதியும் கிளீனரும் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

தாக்குதல்களுக்குள்ளான சாரதியும் கிளீனரும் மிகவும் கஷ்டத்துடன் வவுனியாவுக்கு லொறியைக் கொண்டு வந்து சேர்த்தனர்.

சாரதி யோசப் செபஸ்தியன் (வயது 35) யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். கிளீனர், வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

வேறு ஒரு சாரதி வவுனியாவில் இருந்து லொறியை யாழ்ப்பாணம் கொண்டு வந்து சேர்த்தார்

## முன்னாள் நீதியரசர் காலமானார்

கொழும்பு டிச.6

முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம் கொழும்பில் காலமானார்

அவர் நீண்ட காலமாக அகில இலங்கை இந்துமா மன்றத்தின் தலைவராக இருந்தார்.

பல பொது ஸ்தாபனங்களில் அங்கம் வகித்து சமய, சமூகத் தொண்டாற்றி வந்த பெரியார் அவர்.

அவரது இறுதிக் கிரியைகள் நாளை சனிக்கிழமை காலை நடைபெறும்.

★ இனப்பிரச்சினை

# இலங்கை அரசை இந்தியா நிர்ப்பந்தம் செய்தால் வெற்றி

## அமிர்தலிங்கம் பேட்டி

யாழ்ப்பாணம், டிச. 6

இந்தியாவின் தற்போதைய அணுகுமுறை வெற்றி அளிக்க வேண்டும் என்றால், இந்தியா இலங்கையை நிர்ப்பந்தம் செய்ய வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் 'புரொன்ட் லைன்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் மேற்கண்ட கருத்தை வெளியிட்டிருக்கின்றார்.



ஆகஸ்ட் 1983 இல் இலங்கைஇனப்பிரச்சினையில் இந்தியா அக்கறை காட்டியது.

அதிலும் பார்க்க கூடிய பொறுப்பு இந்தியாவிற்கு இப்போது உண்டு.

யுத்தநிறுத்தத்தை முன்னின்று கொண்டு வந்த இந்தியா, இனப் பிரச்சினைப் பேச்சுக்களில் கலந்து கொள்ள முடியாது என்ற நிலையை இனி எடுக்க முடியாது.

இந்தியாவின் பங்கு பலனளிக்கக் கூடியதாக அமையவேண்டும். அப்படி அமைய வேண்டுமானால் இந்தியா, இலங்கை அரசு மீது நிர்ப்பந்தம் பிரயோகிக்க வேண்டும்.

பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும் என்பதை இலங்கை மனதார விரும்பவில்லை.

இலங்கை அரசின் நேர்மையை நாம் சந்தேகிக்கின்றோம். அதனால் தான் போராளிகள் ஒன்றையும் கூறாமல் உள்ளார்கள்.

அப்படி கூறிவிட்டால் போதும். அதனைப் பிடித்துக் கொண்டு போராளிகளைச் செல்வாக்கு இழக்கச் செய்வதில் தான் இலங்கை அரசு ஈடுபடும். வேறுபலன்கள் அதனால் வரமாட்டா.

இலங்கையின் நேர்மை பற்றி இந்தியா உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

தீர்வு கண்டு விட்டால் மட்டும் போதாது அதை சரியாக நடைமுறைப் படுத்தும் உத்தரவாதத்தையும் இந்தியா தான் தரவேண்டும்.

இப்படி திரு. அமிர்தலிங்கம் தனது பேட்டியில் கூறியிருந்தார்.

முழுப்பேட்டி விவரம் (நாளைய உதயனில்.)

## தேடுதலின் பின் சிறுவர்கள் காணமல் போய்விட்டனர்

### ஜனாதிபதிக்கு முறையீடு

யாழ்ப்பாணம், டிச.6

ஆயுதப்படையினர் நடத்திய தேடுதலைத் தொடர்ந்து சில சிறுவர்கள் காணமற் போய்விட்டனர் என்றுஜனாதிபதிக்கு முறையிடப்பட்டுள்ளது

முல்லைத் தீவு பிரஜைகள் குழுவே இது சம்பந்தமாக ஜனாதிபதிக்கு முறையிட்டுள்ளது.

முல்லைத்தீவு — நெடுங்கேணி வீதியில் கடந்த 3 தினங்களாக ஆயுதப்படையினர் தேடுதல் நடத்தி வந்தனர்.

அச்சமயத்தில் பலர் தாக்குதலுக்கு ஆளாகினர். சில சிறுவர்கள் காணமற் போனார்கள்.

மக்கள் காடுகளில் வசிக்கின்றார்கள். மக்களுக்கு பாதுகாப்பு வழங்குங்கள் – இப்படி பிரஜைகள் குழு கேட்டுள்ளது.

## இலங்கை தமிழ் அகதிகளின் நிலை மீண்டும் ஐ. நாவின் கவனத்திற்கு

### இந்திய பிரதிநிதி கொண்டுவந்தார்

சென்னை, டிச. 6

தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்திருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளின் நிலையை மீண்டும் ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்துக்கு இந்தியா கொண்டுவந்திருக்கிறது.

மனித உரிமைகள் பற்றிய பிரச்சினைகளை கையாளும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை கமிட்டியிடமே இந்த விடயம் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கமிட்டியில் இந்திய பிரதிநிதியாக விளங்கும் தமிழ் எம். பி. திரு. இராமகிருஷ்ணன் இந்த விடயத்தை கமிட்டியின் கவனத்துக்கு கடந்த புதன்கிழமை கொண்டு வந்தார்.

இந்தியாவின் சார்பில் கமிட்டியின் முன் அவர் உரையாற்றினார்.

தமிழகத்தில் தஞ்சம் புகுந்திருக்கும் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட அகதிகளின் நிலைபற்றியும்—

அவர்களுக்கு புகலிடம் அளிப்பதில் இந்தியா எதிர்நோக்கும் பிரச்சினைகள்பற்றியும் அவர் கமிட்டிக்கு எடுத்துரைத்தார்.

இதே வேளை இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டினையும் ஐக்கியத்தையும் பாதுகாக்கும் நிலைப்பாட்டையே இந்தியா கொண்டிருக்கிறது என்பதை அவர் அத்தருணத்தில் வலியுறுத்தினார்.

ஜனநாயக உணர்வின் அடிப்படையில் கௌரவமாகவும், பாதுகாப்பாகவும் அகதிகள் தாயகத்துக்கு திரும்பக்கூடிய வகையில் ஒரு நியாயமான அரசியல் தீர்வு காணப்படவேண்டும். இதுவே இந்தியாவின் எதிர்பார்ப்பு என கமிட்டியிடம் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தைப் பற்றி கடந்த இரு வருடங்களில் இரண்டு தடவைகள் ஐ. நா. சபையில் இந்தியா பிரஸ்தாபித்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## பரீட்சையை குழப்ப வேண்டாம்

### தமிழீழ மாணவர் பேரவை மட்டக்களப்பில் சுவரொட்டி

மட்டக்களப்பு டிச6

ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை நேரத்தில் சிறுசிறு தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டு தமிழ் மாணவரின் எதிர்காலத்தை பாழடிக்க வேண்டாம்.

தமிழ் ஈழ மாணவர் பேரவை சகல இயக்கங்களிடமும் இப்படி வேண்டியிருக்கிறது.

இது தொடர்பான சுவரொட்டிகள் மட்டக்களப்புபகுதியில் நேற்று ஒட்டப்பட்டிருந்தன.

பரீட்சை நேரத்தில் ஹர்த்தால், விடுத்தாள் அபகரிப்பு போன்ற குழப்ப நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் எனவும் அந்தச் சுவரொட்டியில் கோரப்பட்டிருந்தது.

இதேவேளை மேற்படி பரீட்சையை குழப்புபவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படும் சுவரொட்டிகள் மற்றொரு அமைப்பால் வெளியிடப்பட்டு மட்டக்களப்பு பகுதியில் நேற்று ஒட்டப்பட்டிருக்கின்றன.

## சுபநேரம்

6-12-1985
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
6.17 முதல் - 7.47 வரை
ராகுகாலம்:
10.47முதல்–12.17வரை
நவமி முன்னிரவு 8.06 வரை

## கடத்தப்பட்டது

குப்பை கொட்டுவதற்கு சென்ற டிராக்டர் கடத்தப்பட்டது.

இந்தச்சம்பவம் நேற்று யாழ் நகரத்தில் நடந்தது.

யாழ். மாநகரசபைக்கு சொந்தமான டிராக்டர் குப்பை கொட்டுவதற்கு காக்கைதீவுக்கு போனபோது அங்கு கடத்தப்பட்டது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## சிவாஜியுடன் நடித்ததை நினைத்தால் இனிக்கிறது

நடிகை வடிவுக்கரசி இல்லை, அவர் இப்பொழுது தயாரிப்பாளர் வடிவுக்கரசி. இவர் பல வருட காலமாக கெமரா மேனைப் பணியாற்றும் பத்மநாபனைத் திருமணம் செய்து கொண்டு விட்டார்.

அமைதியான குடும்ப வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் இவர் சினிமாத் துறையையும் விட முடியாமல் இருக்கிறார்.

இவரிடம் "முதல் மரியாதை" படத்தில் சிவாஜிக்கு ஜோடியாக நடித்ததைப்பற்றி கேட்கப்பட்டது.

அவர் சொன்னார்: "மூன்று வருடங்களுக்கு முன் வெளியான "வா கண்ணா வா" படத்தில் சிவாஜிக்கு மகளாக நடித்தேன்.

குறுகிய கால இடைவெளியில் இப்போது சிவாஜிக்கு ஜோடியாக "முதல் மரியாதை" படத்தில் நடித்திருக்கிறேன். இதை நினைக்கும் போதே இனிக்கிறது.

"வா கண்ணா வா"வில் சிவாஜிக்கு ஜோடி சுஜாதா. அப்போதே சிவாஜியிடம் 'உங்களுக்கு ஜோடியாக ஒரு படத்திலாவது நடிக்கவேண்டும்' என்று எனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினேன்.

அதற்கு அவர், "நேரம் வரும்" என்ற பாவனையில் சிரித்தார். அந்த நேரம் தான் "முதல் மரியாதை"யில் வந்தது.

ஆனாலும் இந்தப் படத்தில் மகிழ்ச்சி கலந்த வருத்தம். சிவாஜியுடன் சந்தோஷமாக இருக்கும் ஜோடியல்ல நான். சதா சண்டையிடும் ஜோடியாகத்தான் நடித்திருக்கிறேன்" என்றார்.

தினசரி சினிமா

### படப்பிடிப்பில் நூறு பாம்புகள்

சுதா சந்திரனைப் பார்த்து நூறு பாம்புகள் விலகி ஓடுகின்றன. இது படத்தில் ஒரு காட்சி. "சர்வம் சக்தி மயம்" படம் இயக்கியவர் பி. ஆர். சோமசுந்தர்.

காட்சியின் பின் பாம்புகளைப்பிடித்துப் பைகளில் போட பதினாறு பாம்பாட்டிகள்.

தொலைபேசி

## இரவுநேர பாவனைக்கு அரைவாசிக் கட்டணம்

கொழும்பு, டிச. 6

இரவு தொலைபேசி அழைப்புகளுக்கான கட்டணம் குறையும்.

வழக்கமான கட்டணத்தின் அரைவாசியாக இது இருக்கும்.

தொலை தொடர்பு திணைக்களம் இவ்வாறு முடிவு செய்திருக்கிறது.

மாலை 6 மணி முதல் காலை 8 மணி வரையான நேரத்தில் பாவிக்கப்படும் தொலைபேசி அழைப்பு யூனிட்டுகளுக்கு கட்டணம் அரைவாசியாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## 40 பேர் ஏ. எஸ். பி. பதவி உயர்வு

யாழ்ப்பாணம், டிச. 6

நாற்பது பொலீஸ் அதிகாரிகள் உதவிப் பொலீஸ் அதிபர்களாக (ஏ. எஸ். பி க்களாக) பதவி உயர்த்தப்பட்டனர்.

இவர்களில் இருவர் தமிழர். நால்வர் முஸ்லிம்கள். அவர்கள் பெயர் விபரம் வருமாறு:-

திருவாளர்கள்; வி. நமசிவாயம், ஏ. இயோபிலஸ். ஜனாப்கள்: எம். ஏ. கமால்தீன், ஜி. எச். ஜயா, ஏ. சி. எஸ்.சகாப்தீன், என். கே. சலங்கன்.

சென்னை மெரீனா கடற்கரைசாலை

# துப்பாக்கிப் பிரயோகத்தில் 6 மீனவர்கள் பலி!

## பஸ் காவல்நிலையம் தீவைப்பு எதிர்க்கட்சிகள் கண்டனம்

சென்னை, டிச. 5

சென்னை மெரீனா கடற்கரைச் சாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் 6 மீனவர்கள் கொல்லப்பட்டனர். ஏராளமானவர்கள் காயம் அடைந்தனர்.

பொலீஸார் மீது கல் வீசி வன்முறையில் ஈடுபட்ட மீனவர்களைக் கலைப்பதற்காக பொலீஸார் மூன்று இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட முன்னர் பொலீஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தும் குண்டாந்தடியடி நடத்தியும் கூட்டத்தினரைக் கலைக்க முயன்றனர். நிலைமை கட்டுக்கடங்காமல் போனதால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

மெரீனா கடற்கரையில் நின்ற தமது கட்டுமரங்கள், வள்ளங்கள், மீன் வலைகள் ஆகியவை பொலீஸாரால் கைப்பற்றப்பட்டதை அடுத்தே மீனவர்களின் ஆர்ப்பாட்டம் நடந்தது.

மெரீனா கடற்கரையை அழகுபடுத்தும் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு பொலீஸார் இவற்றைக் கைப்பற்றி இருந்தனர்.

கைப்பற்றப்பட்ட வள்ளங்களும் கட்டுமரங்களும் உடனடியாகத் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் —

அவை கைப்பற்றப்பட்டதால் தமக்கு ஏற்பட்ட நஷ்டத்துக்காக தாம் வசிக்கும் அரச குடியிருப்புகளுக்கான ஒரு மாத வாடகை தம்மிடமிருந்து அறவிடப்படக்கூடாது என்றும் — மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கையை முன்வைத்து நடத்திய ஆர்ப்பாட்டமே 6 மீனவர்களின் உயிரைக் குடித்துள்ளது.

மீனவர்களின் கல் வீச்சினால் 89 பொலீஸார் காயம் அடைந்தனர்.

சென்னை குடிசை மாற்று வாரியத்தை நோக்கி மீனவர்கள் ஊர்வலமாகச் செல்ல முயன்றபோது, புதிதாக அங்கு அமைக்கப்பட்ட காவல் நிலையம் ஒன்றைத் தாக்கி அதற்குத் தீவைக்க முயன்றனர்.

லொயிட் சாலையில் பல்லவன் போக்குவரத்து பஸ் ஒன்றுக்குத் தீ வைத்தனர்.

மெரீனா குடிசை மாற்று வாரியக் கட்டடத்தையும் தாக்க முற்பட்டனர்.

இந்த மூன்று சம்பவங்களின்போதே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

துப்பாக்கிப் பிரயோகத்தில் காயம் அடைந்தவர்கள் ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை தி.மு.க.வும் எதிர்க்கட்சிகளும் வன்மையாகக் கண்டித்துள்ளன.

துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாக நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தமிழ்நாடு கம்யூனிஸ்ட் மார்க்சிய பிரிவுத் தலைவர் திரு. நல்லசிவம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### கோவாவுக்கு மாநில அந்தஸ்து

பனஜி, டிச 6

இந்தியாவில், கோவா பிரதேசத்துக்கு மாநில அந்தஸ்து வழங்க மத்திய அரசு சாதகமாக உள்ளது.

கோவாவிற்கு, யூனியன் பிரதேச அந்தஸ்தே இப்போது வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அமைச்சர் திரு. யோகேந்திரா மக்வானா கோவாவின் மாநில அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை குறித்து பிரதமர் ஆதரவாக இருக்கிறார் என்று தெரிவித்தார்.

## பாகிஸ்தான், இந்தியா நாடுகளை இணைத்து சமஷ்டி அரசு

### பாக். முன்னாள் பிரதமர் பூட்டோ திட்டமிட்டதாக புதிய தகவல்

புதுடில்லி, டிச 5

பாகிஸ்தான், இந்தியா நாடுகளை இணைத்து சமஷ்டி ஒன்றை உருவாக்குவது. அதற்குப் பிரதம மந்திரியாக திருமதி இந்திராகாந்தி ஜனாதிபதியாக ஸுல்பிகார் அலிபூட்டோ இருப்பது;

இப்படி பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பூட்டோ எண்ணி இருந்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்திராகாந்தி சீக்கியத் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பூட்டோ, நீதிமன்ற விசாரணையின் பின்னர் தூக்கில் இடப்பட்டார்.

பூட்டோவின் நெருங்கிய சகாவான ஜனாப் ஹமிட்முகமட் இப்படித் தெரிவித்ததாக யூஎன்ஐ செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

இந்த எண்ணத்தை அடிப்படையாக வைத்த ஜனாப் முகமட் கட்டுரை ஒன்றைப் பாகிஸ்தான் டைம்ஸ் தினசரியில் வெளியிட்டார்.

அதன் பின்னர் அவருக்கு பூட்டோ பதவி உயர்வு அளித்ததாக மேற்கு பஞ்சாப்பின் முன்னாள் முதலமைச்சர் ஹனிப் ரமயி சொன்னார். இவரும் பூட்டோவின் நெருங்கிய ஒரு சகா.

### அடையாள கார்ட் இல்லை தாக்கப்பட்டார்

நல்லூர் டிச. 6

அடையாளக் கார்ட் வைத்திராத இளைஞர் ஒருவர் இராணுவத்தால் தாக்கப்பட்டார் என்று கூறப்படுகிறது.

சுப்பிரமணியம் குமாரசாமி (வயது 32) என்ற இந்த இளைஞர் தற்போது யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த போது அடையாளக் கார்ட் இல்லாதகாரணத்தால் இவர் நாவற்குழியில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

### பருத்தித்துறை பிரஜைகள் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிச. 6

பருத்தித்துறை பிரஜைகள் குழுவின் வருடாந்த பொதுக் கூட்டம் ஜனவரி 19 ஆம் திகதி நடைபெற உள்ளது.

பருத்தித்துறை பார்வத பத்தினி கலா மண்டபத்தில் கூட்டம் நடைபெறும்.

புதிய நிர்வாகிகள் தெரிவு அன்றைய தினம் இடம்பெறும்.

## யூரியா சிலிண்டர் வெடித்தது சபுகஸ்கந்தையில் நச்சு வாயு

கொழும்பு,டிச 6

சபுகஸ்கந்தையில் யூரியா தொழிற்சாலை ஒன்றின் காஸ் சிலிண்டர் வெடித்ததினால் நச்சு வாயுக்கசிவு ஏற்பட்டது.

இந்த நச்சு வாயுவை சுவாசித்த அயலவர் 60 பேர் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

உரக்கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான இந்த தொழிற்சாலையில் கடந்த திங்கள் இரவு 12.30 மணிக்கு நச்சு வாயுக் கசிவு ஏற்பட்டது. இதனால் நித்திரையிலிருந்த அயலவர் பாதிக்கப்பட்டவர்.

பலர் மயக்கமடைந்தனர். பலர் இரத்த வாந்தி எடுத்தனர்.

இவர்கள் அனைவரும் முதலில் ஒரிபத்கொட ஆஸ்பத்திரிக்கும் பின்னர் அங்கிருந்து கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள்.

சிலிண்டரில் இருந்த யூரியா வாயுவே கசிந்ததாகக் கூறப்படுகிறது.

### கொள்ளை

யாழ்ப்பாணம்,டிச. 6.

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் சோண்டாவில் முகவர் நிலையத்தில் கடந்த 29ஆம் திகதி இரவு 12,000 ரூபா பெறுமதியான மரக் குற்றிகள் ஆயுதமுனையில் கொள்ளை இடப்பட்டன.

லொறியில் சென்ற 10 பேர், இந்தக் கொள்ளையை நடத்தினர் என்று யாழ்ப்பாணப் பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.



வெளி உலகில்

ஜம்மு-காஷ்மீர்

# வட எல்லைப்பகுதிகளில் பாக்துருப்புகள் குவிப்பு

### பி.ரி. ஐ. செய்தி கூறுகிறது

புதுடில்லி, டிச. 5

ஜம்மு—காஷ்மீர் வட எல்லைப் புறத்தில் பாகிஸ்தான் துருப்புக்கள் குவிக்கப்படுகின்றன.

இப்படி பிரிஐ செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

எல்லைப்புறத்தில் இந்தியத் துருப்புக்களும் பாகிஸ்தான் துருப்புக்களும் அடிக்கடி துப்பாக்கிப்பிரயோகம் செய்கின்றன.

பாகிஸ்தான் எல்லைப் புறத்தில் துருப்புக்களை அதிகரித்து வருகின்றது. பெரிய அளவில் இராணுவ ஒத்திகையும் நடத்துகின்றது.

புதிய வீதிகள் 'பாலங்கள், ஹெலிகொப்டர்கள் இறங்கக்கூடிய பாதைகள், கிடங்குகள் முதலியனவற்றையும் பாகிஸ்தான் அமைத்து வருகின்றது.

சில தினங்களுக்கு முன்னர் நடந்த சண்டையில் இரண்டு பாகிஸ்தானிய துருப்புக்கள் கொல்லப்பட்டனர். இரண்டு இந்தியக் குடிமக்கள் காயமடைந்தனர்.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்,

பாகிஸ்தான், துருப்புக்களைக் குவிப்பது பற்றித் தங்களுக்கு எதுவும் தெரியாது— என்றார். இப்படி பி ரி ஐ செய்தி ஸ்தாபனம் கூறுகின்றது.

## பஞ்சாப் வன்செயல் மாநில அரசுமீது ராஜீவ் கண்டனம்

புதுடில்லி டிச.5

பஞ்சாபில் மீண்டும் அதிகரித்து வரும் வன்செயல்களுக்கு மாநில அரசே காரணம்.

இப்படி இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி குற்றஞ் சாட்டியுள்ளார்.

பொற்கோவிலை 1984 ஜூன் மாதம் இந்திய ராணுவம் தாக்கிய சமயம் கைது செய்யப்பட்டோரில் பெரும்பாலானோரை அண்மையில் பதவி ஏற்ற பஞ்சாப்பில் அகாலிதள் மாநில அரசு விடுதலை செய்தது.

"அப்படி விடுதலை செய்ததுதான் தீவிரவாதிகளின் வன்செயல்கள் பஞ்சாப்பில் அதிகரிப்பதற்குக் காரணம்" என்று பிரதமர் திரு. ராஜீவ் காந்தி சொன்னார்.

ஜப்பான், வியட்னாம் பயணத்தை முடித்து நாடு திரும்பிய பிரதமர் விமானத்தை விட்டு இறங்கியதும் பாதுகாப்பு அதிகாரிகள் பஞ்சாப் நிலைமை பற்றி அவருக்கு எடுத்துக் கூறினர்.

24 மணித்தியாலங்களில் மூன்று பேர் தீவிரவாதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர் – 5 பேர் காயம் அடைந்தனர். "பஞ்சாப் அரசு கைதியாகியிருந்தவர்களை கண்டபடி விடுதலை செய்ததை நான் விரும்பவில்லை.

தீவிரவாதிகள் மீது பஞ்சாப் அரசு மென்மையாக நடப்பதை நான் விரும்பவில்லை"- இப்படி பிரதமர் கூறினார்.

தீவிரவாதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும் படி பிரதமர் பஞ்சாப் மாநில அரசைக் கேட்டுள்ளார்.

பஞ்சாப் அரசும் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி உள்ளது.

ரஜ்னீஷ் சுவாமி

## வருடத்திற்கு 365 கார் உபயோகிக்க வேண்டும்

### பக்தர்களின விருப்பமாம்

டல்லஸ், டிச 6

ஒருநாளைக்கு ஒரு கார் ஸ்ரீ ரஜ்னீஷ் சுவாமி உபயோகிக்க வேண்டும் என்பது அவரின் சீடர்களின் திட்டமாம்.

அதன்படி 365 ரோல்ஸ் ரோய்ஸ் கார்களை வாங்க சுவாமியின் சீடர்கள் முயற்சித்து வந்தனர்.

இத்தகவலை அமெரிக்க கார் வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.

அண்மையில் சுவாமி ரஜ்னீஷ் அமெரிக்காவில் விட்டு வந்த 84 ரோல்ஸ் ரோய்ஸ் கார்களை இந்த வர்த்தகர் 60 லட்சம் மில்லியன் டாலர் பணம் கொடுத்து வாங்கினர்.

வர்த்தகரின் பெயர் திரு ரொத்லிஸ் பெர்கர்

## தெல்லிப்பழை மனநோய் வைத்தியப் பிரிவு மூடப்படமாட்டாது

காங்கேசன்துறைடிச. 6

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை மனநோய் வைத்திய பிரிவு மூடப்படமாட்டாது என வைத்தியசாலைக் கமிட்டி தெரிவித்துள்ளது.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை மனநோய் வைத்திய பிரிவில் சில பிரச்சினைகள் எழுந்ததையடுத்து இப் பிரிவு மூடப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

இவ்விடயத்தை வைத்தியசாலைக் கமிட்டி மேலதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்து நடவடிக்கை எடுத்தது.

வைத்தியசாலை கமிட்டித்தலைவர் திரு இ.சபாரத்தினம் இது பற்றி தெரிவிக்கையில்:

மனநோயாளர் பிரிவுக்கு நோயாளரை நேரே அனுமதிப்பது பற்றி ஒரு மனநோய் வைத்திய நிபுணர் பிரச்சினைகளை எழுப்பியிருந்தார். இது குறித்து மேலிடத்துடன் தொடர்பு கொண்ட போது வழமைக்கு மாறாக எதுவும் செய்ய வேண்டாமென மேலிடம் அவருக்கு உத்தரவிட்டது. வெளிநோயாளர் பகுதி வைத்தியஅதிகாரி தமது அபிப்பிராயப்படி மனநோயாளரை வைத்தியசாலை வார்ட்டுக்கு நேரே அனுமதிக்கலாமெனமேலிடம உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## நிதி ஒதுக்கீட்டு சட்டமூலத்தில் திருத்தம்

கொழும்பு, டிச. 6

உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு இசைங்க நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்திற்கு திருத்தம் கொண்டு வரப்பட உள்ளது.

இத்தகவலை நிதி அமைச்சர் ரொனி டிமெல் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடியின் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்த திரு. எல். ஒ. எச். மணிகசேகராவிற்கு அமைச்சர் நன்றி சொன்னார்.

## பாடசாலைகளில் கருத்து வேறுபாடுகள் களைந்தெறியப்படவேண்டும்

### வடமாநில கல்விப் பணிப்பாளர் உரை

நல்லூர், டிச. 6

எமது பாடசாலை மாணவர்களிடையே ஆசிரியர்களிடையே அதிபர்களிடையே இருக்கின்ற கருத்து வேறுபாடுகள் களைந்தெறியப்படவேண்டும்.

நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய கலைவிழாவில் கலந்து கொண்டு பேசிய வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து மேலும் பேசும் போது:

பாடசாலைகளின் வளர்ச்சி அதிபர்களில் மட்டும் தனியாகத் தங்கி இருக்கவில்லை. சமூக ஸ்தாபனங்களினதும்; பிரமுகர்களினதும் ஒத்துழைப்பு மூலமே வளர்ச்சியைக் கட்டி எழுப்ப முடியுமென்றார்.

முன்னாள் பாடசாலை அபிவிருத்திச் சபை செயலாளர் திரு. செ. வரராசா மங்கள விளக்கேற்றி விழாவினை ஆரம்பித்து வைத்தார்.

நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சிநாயகமூர்த்தி வித்தியாலய அதிபர் திரு. பொ நடராசா ஆகியோரும் உரையாற்றினர்'

### விசேஷ பூசை

நல்லூர், டிச.6

ஆறுமுக நாவலரின் 107 ஆவது குரு பூசை தினத்தை முன்னிட்டு புதனன்று நல்லூர் கந்த சுவாமி கோவிலிலும், கைலாசபிள்ளையார் கோவிலிலும், வெங்கடேஸ்வரப் பெருமான் கோவிலிலும், வண்ணை சிவன் கோவிலிலும் விசேஷ பூசைகள் நடந்தன.

### சைவசமய பாடப் பரீட்சை

வட்டுக்கோட்டை, டிச 6

யாழ். சைவ பரிபாலன சபையினர் கடந்த மாதம் 3ஆம் திகதி அகில இலங்கை ரீதியில் நடத்திய சைவ சமய பாடப் பரீட்சையின் விடைப் பத்திரங்கள் புள்ளியிடுவதற்காக பரீட்சகர்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.


வெற்றி எசன்ஸ் சப்ளாயர்ஸ்

223, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

1985 - கிறிஸ்மஸ் திருநாளைச் சிறப்புடன் கொண்டாட வேண்டுமா?
1986-புது வருடத்தைக் குதூகலமாக வரவேற்று மகிழவேண்டுமா?
உங்கள் எண்ணம் எம்மால் நிறைவேறட்டும்!

* றிச் கேக்
* பட்டர் கேக்
* கிறிஸ்மஸ் கேக்

எவ்வகையான கேக் வகைகளும் தயாரிப்பதற்குத் தேவையான
உள்நாட்டு, வெளிநாட்டு மூலப்பொருட்களை நாமே விற்பனை செய்து வருகிறோம்.
சிறப்பாகவும் சிக்கனமாகவும் உங்கள் கேக் வகைகளுக்குத் தேவையானவற்றைத் தாமதம் இன்றி மலிவாகப் பெற்றுக்கொள்ளுங்கள்
T'Phone: 24823

### உதய சங்கற்பம்

ஓர் நோக்கில் ஒரேவிதத் தன்மையின் இயற்கை. ஆனால் உதிரங்களில் இரணங்கள் அதனை ஆவியாக்கி வானில் உயர்த்துகின்றன. அதுபோன்றே மனமும் இழிந்த பொருள்களான விஷய சுகங்களை நாடிப்போவது இயற்கை. ஆனால் கடவுளின் அருள், மனத்தை உயர்ந்த பொருளை நாடிச் செல்லும் படி தூக்கிவிடும்.

—அன்னை சாரதாதேவி.

உதயன்

உண்மை - அஞ்சாமை - தூய்மை

இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24805 22073

6-12-85 த. பெ. 23

## பரீட்சை குழம்பினால் நஷ்டம் நம்மவர்க்கே

வருடாந்தம் நடைபெறும் ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சை நாளை ஆரம்பமாகிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள்.

இலங்கையின் கல்வித் திட்டத்தில் ஜி. சி. ஈ. சாதாரண தராதரப் பத்திரம் முக்கிய இடம் பெறுகிறது. இடைநிலைக் கல்வி மட்டத்தில் ஒருவரின் அறிவை அளக்கும் கோலாக அது விளங்குகின்றது. உயர் கல்வியைத் தொடர்வது, வேலைவாய்ப்புப் பெறுவது போன்றவற்றுக்கு ஒருவரின் கல்வித் திறமையைக் கணிக்கும் மானியாகவும் அதுவே பயன்படுத்தப்படுகிறது.

கடந்த சில வருடங்களாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் ஜி சி. ஈ. சாதாரண பரீட்சை குழப்பப்பட்டது. அதனால் மாணவர்கள் பாதிக்கப்பட்டனர். பரீட்சைக்கு ஆயத்தம் செய்தும் அதனை எழுதித் தேற முடியாத நிலை ஏற்பட்டது. பின்னர் அரசாங்கம் கொடுத்த ஒரு சில வார அவகாசத்தில் மீண்டும் பரீட்சையை எழுத வேண்டி இருந்தது.

மாணவர்களைப் பரீட்சைக்குத் தோற்றவிடாது குழப்புவது சரியானதே என்ற ஒரு பொய்மை நிலை ஒரு சிலரால் அப்போது தோற்றுவிக்கப்பட்டிருந்தது. இலங்கை அரசாங்கம் நடத்தும் பரீட்சையில் தேறியும் எமக்கு என்ன கிடைக்கப்போகிறது என்ற வாதத்தையும் சிலர் முன்வைக்கத் தவறவில்லை.

எனினும் சில இளைஞர் இயக்கங்கள் பரீட்சையைக் குழப்புவதன் ஆபத்தை உணர்ந்தன. அதனைத் துணிந்து எதிர்க்கவும் செய்தன.

இம்முறை நடக்கும் ஜி. சி. ஈ. பரீட்சையைக் குழப்ப வேண்டாம். இவ்வாறு வடமாநிலக் கல்வி அதிபதி திரு. எம். சியாம்பிள்ளை உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். அவரது வேண்டுகோள் தமிழ்ப் பகுதிகளின் நலனில் அக்கறை கொண்ட சகலராலும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. அதனை அடைவதற்கு எல்லோரது பங்களிப்பும் அவசியம்.

தமிழ் மக்கள் இருள்சூழ்ந்த காலகட்டத்தில் வாழ்கிறார்கள். எனினும் தமக்குள்ள உரிமைகளுக்காகப் பாடுபட அவர்கள் பின்நிற்கவில்லை. அத்தகைய துணிவைத் தூண்டும் சக்தி எது! கல்வி. தமது அரசியல், பொருளாதார விடுதலைக்காக உழைக்க வேண்டும் என்ற விழிப்புணர்ச்சிக்கு அத்திவாரமாக அமைவது என்ன? — கல்விதான்.

உரிமையை இப்போதைக்கு இழந்திருந்தாலும் கூட உடைமைகளை தற்காலிகமாக இழக்க வேண்டி இருப்பினும் கூட இலங்கைத் தமிழ் மக்களை — அவர்களின் "இமேஜை" — உலகெலாம் உயர்த்தி நிற்பது கல்வி என்னும் பெருஞ்செல்வம்.

அந்த அரும் நிதி எமது வருங்காலச் செல்வங்களுக்கு நிச்சயம் கிடைத்தாக வேண்டும். கல்வி வளம் இல்லாத நாட்டில் எது இருந்தும் பயனில்லை. எவ்வித சுதந்திரமும் நிலைக்கவும் இயலாது.

பரீட்சையை நடத்துபவர்கள் யாராக இருந்தால் என்ன? அதனால் பெரும் பயன் அடைபவர்கள் எமது பிள்ளைகள். எனவே இம்முறையும் இனிமேலும் பரீட்சைகளைக் குழப்பவிடாது பார்த்துக்கொள்வது இளைஞர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூக நலன்விரும்பிகள் ஆகியோரது பிரதான கடமையாகும்.

# இந்து மதம் காட்டும் சமய சமரசம்

## அதுவே அதன் ஆணிவேர்

ஞானக்கதிர்

மனிதன் மனிதனாக மட்டுமன்றிப் புனிதனாகவும் தூயவனாகவும் பண்புள்ள ஒழுக்க சீலனாகவும் வாழவேண்டும். மதங்களின் நோக்கம் இதுவே.

மனித சமூகத்தை ஒரு அறநெறிக்கட்டுக்கோப்பின் கீழ் வழிநடத்திச் சென்று, மக்கள் மத்தியில் அன்பையும் ஒற்றுமையையும் நிலை நிறுத்துவதே அவற்றின் குறிக்கோளாக இருந்து வருகிறது.

தீய குணங்களினாலும் குரோத உணர்வினாலும் வேறுபட்டுக்குழம்பி, அல்லற்பட்டுத் தவித்துக் கொண்டிருக்கும் மனித குலத்துக்கு இறுதியான பரிபூரணமான, அமைதியையும் ஆனந்தத்தையும் சாந்தியையும் தர வல்லவை மதங்கள்.

மதங்கள் – அவற்றின் வழிகாட்டல்கள் – உபதேசங்கள் – நெறிகள்– கோட்பாடுகள் – மார்க்கங்கள் வேறுபடலாம்.

அவை தமக்குள் வழிபாடு - பூசை - ஆராதனை- தொழுகை– பிரார்த்தனை அனுஷ்டானம் - நெறிமுறை ஆகியவற்றினாலும் மாறுபடலாம்.

இறைவன் அருளைப் பெறுவதற்கு அவை எடுத்துக் கூறும் வழிவகைகள்கூட வெவ்வேறானவையாக இருக்கலாம்.

ஆனால் அவற்றின் குறிக்கோள்கள் – நோக்கங்கள் வேறானவையல்ல; அவை ஒன்றுதான்.

பல்வேறு மதத்தினரால் பல்வேறு உருவங்களில் துதிக்கப்படும் கடவுள்களும் ஒருவரே.

கடவுள் ஒருவனே. அவனையே மக்கள் பல்வேறு வடிவில் வணங்குகிறார்கள். இதனைத்தான் இந்து சமயம் கூறுகிறது.

அதனால்தான் இந்து மதம் எல்லா மதங்களையும் எல்லா மதங்களைப் பின்பற்றும் மக்களையும் ஒன்றென ஏற்றுக் கொள்கிறது.

ஏனைய மதத்தவர்களைப் போல் தமது மதம் காட்டும் நெறி ஒன்றே இறைவனை அடையும் வழி என இந்துக்கள் தனியுரிமை பாராட்டவில்லை.

ந. வித்தியாதரன்

அதனால் தான் இந்து மதம் எல்லா மதங்களையும் சகோதர மதங்கள் என்று ஏற்றுக் கொண்டது; ஒவ்வொன்றும் உயர்வான மதங்கள் என்று போற்றியது. எல்லாம் ஒரு நெறிப்பட்ட மதங்களே என்று அங்கீகாரம் வழங்கியது.

எல்லா மதங்களும் சரியானவையே. ஆனால் அவற்றில் ஏதாவது ஒன்றினை முற்றும் முழுதாக ஏற்றுக் கொண்டு அதன் வழியில் ஒழுகுவது தான் அவசியமானது என இந்து மதப் பெரியார்கள் வலியுறுத்துகின்றனர்.

இந்து மதத்தின் சாரமாகிய சத்தைப் பிழிந்து தன்னகத்தே கொண்டு இருப்பது பகவத்கீதை. இந்துமத கருத்துக்களின் குரலாக ஒலிப்பதும் அதுவே.

அக்கீதையிலே பார்த்தனுக்கு பரந்தாமன் சமய சமரசம் பற்றி இயம்புகின்றார்.

'யார், யார் எந்தெந்த முறையில் என்னை நாடுகிறார்களோ அந்தந்த வழியிலே அவர்கள் என் அருளைப் பெறுகிறார்கள்' என்றான் கீதாசிரியன்.

நதிகள் வேறுபடலாம், அவை வருகின்ற திசைகள், இடங்கள், வழிகள் வேறுபடலாம். ஆனால் இறுதியில் அவை சமுத்திரம் என்ற ஒன்றையே வந்தடைகின்றன.

அதுபோல மக்கள் பல்வேறு மதங்களைப் பின்பற்றி பல்வேறு வகையான வணக்கங்களைக் கைக்கொள்ளலாம். ஆனால் அவர்கள் எல்லோரும் இறைவனையே அடைகிறார்கள். இதனையே எல்லா மதங்களும் போதிக்கின்றன.

ஆற்று வெள்ளம் மலையில் பிறந்து இடையில் நிலத்தின் வழியே பல் வேறாகப் பிரிந்து ஓடியது. இறுதியாக பிரிந்தவை எல்லாம் கடலிலே வந்து ஒன்றாகக் கலந்தன. இது கடவுளின் இயல்பை ஒத்திருக்கின்றது என்கிறார் கம்பர்.

வெள்ளம் பல நீர்த்துறைகளிலே பரந்து நிற்பது போலப் பல்வேறு மதங்களில் பல்வேறு தோற்றத்தில் பெயரில் கடவுள் உருவகப்படுத்தப்படுகிறார்.

வெள்ளம் ஓரிடத்தில் பிறந்து – வெவ்வேறாகப் பிரிந்து - ஓரிடத்தில் சங்கமமாகியது.

அதுபோல பல மதங்களிலும் காட்டப்படும் பல்வேறு நெறிகளும் வேறுபடலாம். ஆனால் அவை அனைத்தும் இறைவன் என்ற ஒரு பரம்பொருளை – இறுதி எல்லையை – அடையும் வழியையே காட்டுகின்றன.

இக்காரணத்தினால் தான் இந்துமதம் தன்னகத்தே பல உட்பிரிவுகளைக் கொண்டிருந்தபோதும் இணைந்து நின்றது. மற்றைய மதங்களை அரவணைத்து நின்றது.

இந்த சமய சமரசம் தான் இந்து மதத்தின் ஆணிவேர். இந்த ஆணிவேரில்தான் ஆயிரம் ஆயிரம் - பல்லாயிரம் ஆண்டுகளாக – இந்து மதம் அவ்விழியிலே தழைத்து நிற்கிறது.

### வித்தாரம்

என்னமுரளி, இன்டைக்கு'மூட்' மாறின மாதிரி இருக்குது. வீட்டிலை அப்பா, அம்மா ஏதாவது எக்கச்சக்கமா...

உன்னைக் குறை சொல்ல ஏலாது. இப்ப எல்லாருக்கும் 'மூட்' அடிக்கடி மாறுது. 'கிளைமேட்' மாற்றத்துக்கும் சிலருக்கு அப்பிடி வாறது தான்.

ஆனால் அரசியல்வாதிகளுக்கு 'மூட்' மாறுவதற்குக் காலநேரம் தேவையில்லை. அவையளுக்கு அடிக்கடி 'அவுட் ஒவ் ரேன்' வரும்.

ஆட்சி அதிகாரத்திலை உள்ளவையும் அப்பிடித் தான். நினைச்சதை எல்லாம் பேசலாம் எண்டு நினைக்கினம். அதுவும் எங்கடை தமிழ் ஆட்கள்ரை விஷயத்தை தங்களுக்கு வாசியான பக்கத்துக்கு மாத்திப் பேசலாம் எண்டு நினைக்கினம்.

அவை பேசிறத்தை வெளி உலகமும் அவதானித்துக்கொண்டு இருக்குது என்பதை மறந்து விடுகினம்.

உப்பிடி அடிக்கடி இங்கு பேசின ஒரு பெரிய தலை கிட்டடியிலை வெளிநாட்டு மகாநாடு ஒண்டுக்குப் போனசமயம் அயல்நாட்டு அதிபதியிடம் நல்லா வேண்டிக் கட்டினார். தமிழர் விஷயத்திலை சரியாக நடக்காட்டால் தாங்கள் வேறை போக்கைக் கையாள வேண்டி வரும் எண்டு அந்தப் 'பெரியவர்' எச்சரித்தாராம். அது பலருக்குத் தெரியாவிட்டாலும் சிலருக்குத் தெரிந்து விட்டதாம்.

அதுக்குப் பிறகு கொஞ்சக் காலம் 'கப் சிப்' எண்டு இருந்த இஞ்சத்தைப் பெரியவர், இப்ப கொஞ்ச நாளா ஏதோ எக்கச்சக்கமா எல்லாம் உளறிக் கொட்டுறார்.

அந்த வெளி அதிபதியார் என்னை என்ன செய்கிறார் பாப்போம் எண்டு சோதிக்கத்தான் இப்பிடி எல்லாம் பேசினாரோ! அல்லது என்னை யார் என்ன செய்ய முடியும் என்ற வீறாப்பிலை பேசினாரோ!

முந்திச் சொன்ன வெளிநாட்டு அதிபதியிடம் இந்தப் பெரியவரும் இன்னும் இரண்டொரு நாளிலை வாங்கிக் கட்டுறாரோ என்னவோ யாருக்குத் தெரியும்.

கொண்டோடி

# சமத்துவம் காண ஸகாத் பயன்படுகிறது

"மேலும் (எவர்கள்) பொன்னையும் வெள்ளியையும் சேமித்து வைத்துக்கொண்டு, அதனை அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யாமல் இருக்கின்றனரோ அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனை உண்டென (நபியே) நீர் கூறுவீராக. (பொன், வெள்ளி) அவற்றை நரக நெருப்பில் பழுக்கக் காய்ச்சி அவற்றைக் கொண்டு அவர்களது நெற்றிகளிலும் விலாக்களிலும் முதுகுகளிலும் சூடிட்டு, உங்களுக்காக நீங்கள் சேமித்து வைத்திருந்த இவற்றைச் சுவைத்துப் பாருங்கள்" என்று கூறப்படும்நாளை (நபியே, நீர் அவர்களுக்கு ஞாபகமூட்டுவீராக) (அல்குர்ஆன்).

ஸகாத் எனும்போது வளர்ச்சி, பொலிவு, தூய்மைப்படுத்தல், அபிவிருத்தி என்ற கருத்துக்களைக் கொடுக்கலாம். செல்வத்தை வளர்த்துத் தூய்மைப் படுத்திப் பொலிவுறச் செய்யும் ஒருசெயல் என்றும் இதைக் குறிப்பிடலாம். குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கமைய குறிப்பிட்ட சிலரால் குறிப்பிட்ட சிலருக்கு குறித்த காலப்பகுதியில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய ஒரு செல்வப் பங்களிப்பு என்றும் வர்ணிக்கலாம். இவை இஸ்லாத்தில் ஐம்பெரும் கடமைகளுள் மூன்றாவது கடமையாகும். இதனை ஆண்டவன் ஒவ்வொரு செல்வம் படைத்த முஸ்லிம்மீதும் இறைவன் கடமையாக்கியுள்ளான்.

பணத்தினையும்பொருட்களையும் ஓரிடத்தில்வைப்பதன்மூலம்தான் ஒருவனது செல்வம் பெருக்கம் அடைகின்றது என்பது மனிதனின் நம்பிக்கையும் கொள்கையுமாக இருந்துகொண்டிருக்கின்றது. ஸகாத் என்னும் செல்வவரியை ஒருவன்

ஏ. எல். சம்சூர்

ஒழுங்காக நிறைவேற்றி வைப்பதன் மூலமாகவே பொருள்பெருக வசதி யேற்படுகின்றது.

இது அல்லாஹ்வின் வாக்கு. ஸகாத், ஸதகா என்பவற்றின் மூலம் அல்லாஹ்வின் பாதையில் சேமிப்பது தான்நிலையான பயனைத் தரும். ஆனால் மனிதனோ அல்லாஹ்வை மறந்து, சுவர்க்கம் -நரகம் என்பவற்றை மறந்து, கியாமத்நாளை மறந்து வாழ்க்கையில் வெறிச்சோடிக் கிடக்கும் சமுதாயத்தினை மறந்து, வயதுவந்தும் வாழ்க்கைப் பட வசதியற்ற நிலையில் வாய்பேச வகையற்ற வறுமை நிலையில் உண்ண உணவின்றி, உடுப்பதற்கு உடையின்றி, உறங்குவதற்கு உறையுளின்றி, தண்ணீர்வசதியின்றித் தரணியிலே தத்தளிக்கும் ஏழைகளின் நிலைமையினை மறந்து செயல்பட்டுக்கொண்டிருக்கின்றனர். இவ்வுலகில்தான் பொருள்வடிவிலும் பணவடிவிலும் சேமித்து வைப்பவை தான் நிலையான பயன் தரும் என அவன் நினைக்கின்றான். அவனது எண்ணம் எவ்வளவோ பெரிய தவறானதாகும். இப்படி நினைத்துக்கொண்டு இவன் சேமிக்கும் பணத்திலும் பொருள்களிலும் சமுதாயத்திற்கு எவ்வித பிரயோசனமும் இல்லை.

"தன்னுடைய பொருள் தன்னை என்றென்றுமே உலகில் நிலைத்திருக்கச் செய்யுமென்று மெய்யாகவே எண்ணிக் கொண்டு, பொருளைச் சேகரித்து அதனை எண்ணிக்கொண்டே இருக்கிறான். அவ்வாறன்று நிச்சயமாக அவன் ஹுதமா எனும் நரகில் எறியப்படுவான்" என்று புனித திருமறையானது கூறுகின்றது.

தனக்காக ஒரு மனிதன் சேமிப்பதாயின் ஸகாத் ஸதகா என்ற வடிவில் இறைவழியில் செலவு செய்வதுதான் என்று அல்லாஹ் திடமாகக் கூறுகிறான்.

ஸகாத்தின் நோக்கம் எனும்போது செல்வந்தரிடையே காணப்படுகின்ற உலோபித்தனத்தை நீக்கி ஏழைகளுக்கு வாரிவழங்கும் மனப்பாங்கினை உருவாக்குகின்றது. ஒருவரிடம் ஒருவர் இரந்து வாழும் பழக்கத்தை இல்லாதொழித்தல், பணம் படைத்தவர்கள் தங்கள் செல்வங்களைச் சமுதாயத்தின் நலன் கருதிச் சமுதாயத்திற்கு வழங்குவதன்மூலம் சமூகம் நலன்பெறும் சமூகங்களிடையே காணப்படுகின்ற வறுமை நிலையினையும் ஏற்றத்தாழ்வையும் குறைக்க ஸகாத் வழிவகுக்கின்றது.

வசதிபடைத்த செல்வந்தர்கள்ஸகாத்கொடுப்பதன்மூலம் அவர்கள் தனது பாவங்களைவிட்டு மட்டும் அகலவில்லை, அவர்கள் தூய்மையும் அடைகிறார்கள். இவற்றினை விநியோகிக்கப்படும் சமூகத்தில் வறுமை நீங்குவதோடு அந்தச் சமுதாயத்தின் பொருளாதாரமும் விநியோகிப்பவரது உடைமையும் அபிவிருத்தியும் வளர்ச்சியடைகின்றன, சமுதாய மக்களிடையே நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வுநீங்கி செல்வந்தர்களுக்கும் ஏழைகளுக்குமிடையே ஒரு பிணைப்பு உண்டாகின்றது. அத்துடன் ஒற்றுமையும் சகோதரத்துவமும் ஏற்படுகின்றது.

(4ஆம் பக்கம் பார்க்க)

### பொய்யாமொழி



பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவன் அடிசேரா தார்

இறைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க முடியும்; மற்றவர் கடக்க முடியாது.

# ஜீ. சி. ஈ. பரீட்சைக்கு ஒத்துழைப்புத் தருக

## வடமாநில கல்விப் பணிப்பாளர் இளைஞர்களுக்கு வேண்டுகோள்

நல்லூர் டிச. 6

நாளை 7ம்திகதி ஆரம்பமாகும் ஜீ. சி. ஈ. பரீட்சைகள் ஒழுங்காக நடைபெற அனைவரும் குறிப்பாக இளைஞர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இப்படி வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. எம். சியாம்பிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜீ. சி. ஈ. பரீட்சை நாளை 7 ஆம் திகதி ஆரம்பித்து 16 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்டத்தில் 165 பரீட்சை நிலையங்களில் 25,000 பரீட்சார்த்திகள் இவ் வருடம் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

இம்முறை நடைபெறும் ஜீ. சி. ஈ. பரீட்சையைத் தகுந்த முறையில் கவனிக்கவென ஒவ்வொரு பரீட்சை நிலயத்திலும் மேலதிக இணைப் பதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பரீட்சை நிலையங்களைச் சூழ பெற்றோர்கள், பழைய மாணவர்கள் கொண்ட கண்காணிப்புக் குழுக்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் செயற்படவுள்ளன.

பரீட்சைகள் எதுவித பிரச்சினையும் இல்லாமல் சுமுகமான முறையில் நடந்தேற அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இப்படி யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. எம். சியாம்பிள்ளை 'உதயன்' செய்தியாளரிடம் சொன்னார்.

### அரசு தயாரித்த நகல் செயல் திட்ட யோசனை

பகுதி 3

1. அரசாங்கத்துக்கு மட்டும் என்று ஒதுக்கப்பட்ட பணிகள்.

அ. எல்லா விஷயங்கள், பணிகளுக்கான தேசியக் கொள்கை.

ஆ. பாதுகாப்பு

இ. உள்நாட்டுப் பாதுகாப்பு

ஈ. சட்டம், ஒழுங்கு; குற்றத் தடுப்பு, குற்றங்களைக் கண்டுபிடித்தல். (மாகாணசபை,மாவட்டசபை வழங்கப்படவுள்ள அதிகாரங்களைப் பொறுத்து)

உ. வெளிநாட்டு விவகாரம்

ஊ. தபால்,தொலைத் தொடர்பு

எ. நீதி — நீதிபரிபாலனம், நீதிமன்றங்கள்

ஏ. வெளிநாட்டு வளங்கள், நாணயக் கொள்கை, தேசிய வருமானம் தொடர்பான நிதித் துறை பற்றியது.

துறைமுகங்களும் அதன் பிரதேசங்களும்

ஐ. விமானத்துறை, விமான நிலையங்கள்

ஒ. தேசியப் போக்குவரத்து

ஓ. ஆறுகளும் நீர்நிலைகளும்

ஔ. கனிப்பொருள்களும் சுரங்கங்களும்

ஃ. ஒலிபரப்பு

க். ஒளிபரப்பு

ங். குடிவரவு, குடியகல்வு, பிரஜாவுரிமை

ச். சுங்கத் திணைக்களம்

ஞ். தேர்தல்கள்-ஜனாதிபதி, நாடாளுமன்றம், இடைநிலை — கடைநிலை அமைப்புக்கள்

ட். கப்பல் போக்குவரத்து, கப்பல் ஓட்டுதல்

ண். பொருளாதார வலயங்கள், பிராந்திய கடல் எல்லைகள்

த். கணக்கெடுப்பு — புள்ளிவிபரம் சேகரிப்பு

ந். தொழில் முறை பயிற்சி

ப். திட்டவட்டமாக வழங்கப்படாத ஏனைய விஷயங்களும் பணிகளும்

ம். மாகாணங்களுக்கு இடையேயான, மாவட்டங்களுக்கு இடையேயான வர்த்தகம்.

ய். அரசாங்க காணிகள் (மாகாண சபை மாவட்ட சபைகளுக்கு வழங்கப்படும் அதிகாரங்களைப் பொறுத்து)

ர். தேசிய சுவடிக்கூடம்.

# வட மாகாணசபைக்கு 50 உறுப்பினர் இருப்பர்

1000 சதுர கிலோ மீட்டர் பிரதேசத்திற்கு ஒரு உறுப்பினராகவும், 40,000 மக்களுக்கு ஒரு உறுப்பினராகவும் மாகாணசபைக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இதன்படிவடமாகாண சபைக்கு பிரதேச விஸ்தீரணத்தின்படி 9 உறுப்பினர்களும் சனத்தொகைக்கு இணங்க 27 உறுப்பினர்களும் இருப்பர். வடமாகாணத்தின் 14 எம்பிக்களையும் சேர்த்தால், வடமாகாணசபையில் மொத்தம் 50 உறுப்பினர்கள் இருப்பர்.

யாழ்ப்பாண மாவட்டம் – 1140 சதுர கிலோ மீட்டர் – 758, 788 மக்கள்.

* கிளிநொச்சி – 931 சதுரகிலோ மீற்றர் – 91, 704 மக்கள்

* முல்லைத்தீவு – 966 சதுர கிலோ மீற்றர் – 77, 189 மக்கள்

* மன்னார் – 12002சதுரகிலோ மீற்றர் – 106, 235 மக்கள்

* வவுனியா – 2945 சதுர கிலோ மீற்றர் –95, 428 மக்கள்

கிழக்கு மாகாணசபையில் மொத்தம் 47 உறுப்பினர்கள் இருப்பர். இவர்களில் 12 பேர் எம்பிக்கள் (பதவி வழி உறுப்பினர்) 25 பேர் சனத்தொகை அடிப்படையில்

(4ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை அரசினால், இனப்பிரச்சினை தீர்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நகல் செயல் திட்ட யோசனைகள் இப்பொழுது வெளிவந்துள்ளன.

இந்த யோசனைகளை, தமிழ் ஈழ விடுதலை அமைப்புக்கள், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன கூட்டாக நிராகரித்து விட்டது குறிப்பிடத்தக்கது.

நகல் திட்ட யோசனைகள் உதயனில் தொடர்ந்து வெளியாகின்றன.

ஐஸ்கிறீம், கேக் வகைகள், பழரச பானங்கள் இவைகளைச் சுவை குன்றுமல் தயாரிப்பதற்குத் தேவையான மூலப் பொருட்கள் யாவற்றையும் பெற்றுக்கொள்ள
*
அபிராமி எசன்ஸ் றேட்ஸ்
31, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(காங்கேசன்துறை வீதி பஸ் நிலைய முன்பாக)

உதயன்
6 - 12 - 1985

HYCO, YEAST, பேக்கிங் பவுடர், மில்க் பவுடர், ஐசிங் சுகர், GOLDEN SYRUP கஜு, பிளம்ஸ் யாவற்றையும் தட்டுப்பாடின்றி விற்பனை செய்பவர்கள்
*
ஐடியல் ஏஜென்ஸி
267 B, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T'Phone: 23648

# எந்தநேரமும் கொந்தளிப்பு வரும் அபாயம்

## இந்திய அமைச்சர் எச்சரிக்கிறுர்

சென்னை, டிச 5
இலங்கையில் தொடர்ந்து பதற்ற நிலை நிலவி வருவதால் எந்நேரமும் கொந்தளிப்பு ஏற்படலாம்.

இப்படி எச்சரிக்கிறுர் இந்திய வெளிவிவகார அமைச்சர் பகத்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் எழுத்து மூல வினு ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இப்படித் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:-

1977, 1981 1983 ஆம் ஆண்டுகளில் இருந்து தொடர்ந்து இலங்கையில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இனப்பிரச்சினை நீடித்து வருவதால் அதன் எதிர் விளைவுகள் தவிர்க்க முடியாததாக உள்ளன.

இலங்கையில் பதற்ற நிலை நிலவுவதால் அங்கு எந்நேரமும் கொந்தளிப்பு ஏற்படலாம்.

ஆகையினுல் பாதுகாப்பு படைகளை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும்படி இலங்கை அரசை இந்திய அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.

யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகள் பற்றியும் இலங்கை அரசுடன் இந்திய அரசு அடிக்கடி தொடர்பு கொண்டு வருகிறது.

பாதுகாப்புப் படைகளுக்கும் போராளிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தங்கள் அடிக்கடி மீறப்படுகின்றன. இதனையடுத்து பொதுமக்கள் தாக்கப்படுகிறுர்கள்.

இப்படித் தாக்கப்படும் பொதுமக்களில் அதிகமானவர்கள் அப்பாவித் தமிழ் மக்களே.

இப்படி அவர் சொன்ஞர்.

## ஊர்காவல் வீரர் திருமலையில் கொலை

திருகோணமலை, டிச.6
ஊர்காவல்படை வீரர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

போராளிகள் தான் சுட்டதாக இறந்தவரின் மரண விசாரணையில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலையில் இருந்து அனுராதபுரம் வீதியில், பத்து மைல் தொலைவில் உள்ள கித்துலுத்து கிராமத்தில் இச் சம்பவம் நடைபெற்றது.

செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடந்த சம்பவத்தில் இறந்தவர் ஆர். ஜி. விஜயரத்ன, வயது 22.

திருகோணமலை நீதிவான் ஹேமால் சேனரத்ன மரண விசாரணை நடத்திஞர்.

எஸ். எம். சிறிபாலா என்னும் இன்னெரு ஊர்காவல் படைவீரர் சாட்சியத்தில் சொன்னதாவது;

சம்பவ தினம் நானும் இன்னும் மூவரும் காவலில் இருந்தோம் இறந்தவரும் அதில் ஒருவர்.

என்னையும் இறந்தவரையும் விட்டுவிட்டு, மற்றஇரண்டு ஊர்காவல் படை வீரர்களும் வெளியே போய் விட்டனர்.

சிறிது நேரத்தில் இறந்தவரும் வெளியே போவதாகக் கூறிச் சென்ருர்.

நான் மட்டும் தனியே காவல் குடிசையில் இருந்தேன்.

திடீரென்று வெளியே வெடிச் சத்தம் கேட்டது.

வெளியே சென்று பார்வையிட்டேன். இறந்தவர் கீழே விழுந்து கிடந்தார். அந்த நேரத்தில் வெளியே சென்று இருந்த மற்ற இரண்டு ஊர்காவல் படைவீரர் வீரர்களும் வந்து சேர்ந்தனர்.

பற்றைக்குள் இருந்து சப்தம் கேட்டதால், எல்லோரும் பற்றைகளை நோக்கிச் சுடத் தொடங்கினேம்.

போராளிகள் தான் சுட்டார்கள் என்று சந்தேகிக்கின்றேன்.

இப்படி சாட்சி சொன்ஞர். கொலைச் சம்பவம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

## முல்லைத்தீவு வெடிவிபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், டிச 6
முல்லைத்தீவுக் கடற்கரை வீதியால் போய்க் கொண்டிருந்த சமயம் வெடி விபத்து ஒன்றுக்கு ஆளான வெள்ளையன் முருகேசு என்ற தொழிலாளி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

புதன்கிழமை இவர் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் இருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டார்.

## நாவலரின் நூல்கள் கிடைக்க ஆணையாளர் உதவ வேண்டும்

### குருபூசையில் உரை

நல்லூர், டிச. 6,
நாவலர் பெருமாஞல் உருவாக்கப்பட்ட சைவ நூல்கள் இன்று கிடைப்பதில்லை. இவை கிடைப்பதற்கு ஆணையாளர் உதவ வேண்டும். இந்த மணி மண்டபம் மூலம் அதனைச் செய்யலாம்.

நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடைபெற்ற 'நாவலர் குருபூசை' விழாவுக்கு தலைமைவகித்து உரை நிகழ்த்திய தினகரன் பிரதம ஆசிரியர் திரு.இ.சிவகுருநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது:-

எமது மக்களிடையே பிரசாரம், பிரசங்கம் மூலம் தேச பக்தியை ஏற்படுத்தியவர் நாவலர். அவர் அன்று காட்டிய அந்த உத்தி முறைகளிஞல் பிரசாரம், பத்திரிகைத்துறை என்பன இங்கு சிறப்புடன் மிளிர்கின்றன.

இன்று எமது இளைஞர் சமுதாயம் தமது கருத்துக்களை பிரசுரங்கள் மூலம் வெளியிட வழி காட்டிக் கொடுத்தவரும் நாவலர் பெருமான் என்றே சொல்லலாம்.

இன்றைய தொடர்புச் சாதனங்களில் முதன்மையானது பத்திரிகை என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். பொதுமக்களைப் பொறுத்தவரை மிகவும் மலிந்த சாதனம் பத்திரிகை.

நாவலர் பெருமாஞல் உருவாக்கப்பட்ட பல சைவப் புத்தகங்கள் இன்று கிடைப்பதில்லை. முன்னர் போல தென்னிந்தியாவில் இருந்தும் தமிழ் நூல்கள் வருவது குறைவு. இந்த நாட்டவர்கள் அருளிய நூல்கள் எமக்குக் கிடைக்கின்றனவா?

எனவே ஆணையாளர் இந்த நிலையத்தின் மூலமாக இதற்கு ஒரு வழி செய்யவேண்டும்.

இப்படி அவர் கூறிஞர்.

மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் பேசுகையில், நாவலர் பெருமானின் பணிகளை நாம் தொடர்ந்து செய்ய இருக்கிறேம் என்ருர்.

வரவேற்புரை நிகழ்த்திய அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு. கா. விசுவலிங்கம் பேசுகையில்:-

இந்தக் கலாசார மண்டபம் என்றே ஒரு நாள் நாவலர் மண்டபமாகத் திகழவேண்டும் என்பது கனவாக இருந்தது அது தற்பொழுதுதான் பலித்துள்ளது. இந்த மண்டபம் மூலம் சைவப் பணி, தமிழ்ப்பணி போன்றவற்றைச் செய்வதற்கும் நாம் திட்டமிட்டுள்ளோம் என்ருர்.

## அக்டோபருக்கு பின் 37 ஆயுதப்படை வீரர் கொல்லப்பட்டனர்

யாழ்ப்பாணம், டிச 6
அக்டோபர் மாதத்தில் இருந்து டிசம்பர் 3ஆம் திகதிவரை ஆயுதப் படையைச் சேர்ந்த 37 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த எண்ணிக்கையில் 18 இராணுவ வீரர்கள், 14 பொலீஸார், 5 கடற்படை வீரர்கள் அடங்குவர்.

கொக்கிளாய், வாகரை, சேருவில, பொலன்னறுவை, மூதூர், திருகோணமலை, மட்டக்களப்பு, கல்லடி, திருக்கோயில் ஆகிய இடங்களில் இடம்பெற்ற வன்செயலகளிலேயே இவர்கள் கொல்லப்பட்டனர்.

30 ஆயுதப் படையினர் காயமடைந்தனர்.

பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இந்த விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடமாகாண சபைக்கு 50 உறுப்பினர்......

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவான உறுப்பினர்கள். 10 பேர் நிலவிஸ்தீரணத்தின்படி தெரிவானவர்கள்.

* மட்டக்களப்பு மாவட்டம் - 2464 சதுர கிலோ மீற்றர் - 330,333 மக்கள்

* அம்பாறைமாவட்டம் - 4539 சதுர கிலோ மீற்றர் - 388, 970 மக்கள்

* திருகோணமலை மாவட்டம் - 2860 சதுர கிலோ மீற்றர் - 273, 998 மக்கள்.

இந்த நகல் செயல் திட்ட யோசனைகள் பரிசிலனை செய்யப்பட்டு, கையெழுத்திட்ட பின்வர் சில கேள்விகள் எழுந்தன. அதற்கு இலங்கை அரசாங்கம் சில விளக்கங்களைக் கூற விரும்புகின்றது. 12ஆம் ஷரத்து பற்றிய தவருன விளக்கத்தை அகற்றவே விளக்கங்கள்.

அ. ஒவ்வொரு 1000 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்திற்கும் ஒரு உறுப்பினர்

ஆ. ஒவ்வொரு 40,000 குடி மக்களுக்கு ஒரு உறுப்பினர்

இ. அபிவிருத்திச் சபைகள் இயங்கும் மாகாணங்களில் நிறுவப்படும் மாகாண சபைகளுக்கு இந்த முறையில் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படமாட்டார்கள்.

ஒரு மாகாணத்தில் இயங்கும் அபிவிருத்திச் சபைகள் தாங்கள் மாகாணசபையாக மாறுவதா என்பது பற்றி 15 ஆவது விதியின் கீழ் முடிவு செய்யும். அப்படிச சேருவது என்று முடிவு செய்யின் தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர்கள் எல்லாம் மாகாண சபை உறுப்பினர்களாக மாறுவர்.

அப்படிச் சேருவதில்லை என்று முடிவு செய்யின் இயங்கிக் கொண்டு இருக்கும் அபிவிருத்திச் சபைகள் தொடர்ந்து இயங்கும். எப்படிப் பார்த்தாலும் உடனடியாக தேர்தல் எதுவும் இடம்பெற மாட்டாது. பதவிக்காலம் முடிவடைந்த பின்னரே புதுத் தேர்தல் இடம் பெறும்.

மேற் கூறப்பட்ட பிரகாரம் அபிவிருத்திச்சபைகள் தொடர்ந்து இயங்கும் மாகாணங்களில் அபிவிருத்திச் சபைகளுக்கே தேர்தல் நடக்கும்.

மாகாணசபையாக மாறுவது என்று தீர்மானிக்கும் அபிவிருத்திச் சபைகள் உள்ள மாகாணங்களிலேயே புதுத் தேர்தல் நடக்கும்.

அபிவிருத்திச் சபைகள் இயங்காத மாகாணங்களில் தான் புதிய தேர்தல்கள் உடன் நடக்கும்.

நிர்வாகமாவட்டங்கள் என்று கூறப்படுவது, தற்போது உள்ள மாவட்டங்களே ஆகும். தற்போதைய நிர்வாக மாவட்டங்கள், தற்போது அபிவிருத்திச் சபைகளின் கீழ் வரும் பிரதேசங்களாகும். கிளிநொச்சியும் இதனுள் அடங்கும். மாவட்டங்களை மீண்டும் வரையறை செய்யும் எண்ணம் இடையாது.

### 13 ஆவது ஷரத்து

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், பதவி வழி உறுப்பினராக இருக்க தெரிவு செய்யப்பட்ட பின்னர் அப்படி இருக்க விரும்பவில்லை என்று தீர்மானித்தால் அதன்படி பதவி வழி உறுப்பினராக இருக்க வேண்டியது இல்லை.

அதே போன்று பதவி வழி உறுப்பினராக தெரிவு செய்யப்படாத ஒரு எம். பி. அப்படியான உறுப்பினராக இருக்க விரும்பி தீர்மானிக்கலாம்.

அரசாங்கம் தொடர்ந்தும் மாவட்ட நிர்வாகத்தை அரசாங்க அதிபர் மூலம் நடத்தும்.

அரசாங்கத்திற்கு உரிய அதிகாரங்களை செயற்படுத்தவே இந்த நடவடிக்கை. மாகாணசபைத்திட்டம் இதைத் தடுக்காது.

மாகாண சபைகளும் இதே மாதிரி மாவட்ட அடிப்படையிலான நிர்வாக அமைப்புக்களை ஏற்படுத்த வேண்டும்.

(நாளை தொடரும்)

## சமத்துவம்.....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருதரமான அமைப்பின் கீழ் ஸகாத்தினை ஒன்றுதிரட்டி அவற்றினை மொத்தமாகக் கொண்டு ஒரு நிதியத்தினை உருவாக்கி சமூகத்தில் ஏழைகளுக்கிடையே காணப்படும் குறைகளைத் தொகுத்து அவற்றினைக் காலப்போக்கில் நிறைவு செய்து வந்தால் தற்போதைக்குக் காணப்படும் கடன் தொல்லைகள், வீடில்லாக் குறைகள், கிணறுகள் இல்லாத இன்னும் எத்தனையோ அத்தியாவசியமான ஏழைகளின் குறைகளை நீக்குவதற்கு இந் நிதியமானது வழிவகுக்கின்றது. சமூகம் சீர் திருத்தமும் பெறுகின்றது. சமூக சீர்திருத்தம் என்னும்போது சமுதாயத்தின் அனேகம்பேர் போதிய ஆற்றலிருந்தும் தேவையான மூலதன மின்மையால் தொழிலின்றி வறுமையில் வாடுகின்றனர். இதஞல் மனம் விரக்திக்குள்ளாகி அவனை அவனது மனமானது பிற்போக்குக்குத் தள்ளப்பட்டு, அவனே அழிவுப்பாதைக்குக் கொண்டுசெல்வது மட்டுமல்லாமல் சமூகத்தினையும்சீரற்றநிலைக்குள்ளாக்குகிருன். எனவே முறையான ஸகாத் விநியோகமானவை இப்படியானவற்றைத் தடுத்து அவர்களுக்குத் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொடுப்பதன்மூலம் சமூகம்திருந்துவதற்கு வழி வகுக்கின்றது.

எனவே இப்படியாகக் குடும்பவாரியாகவும் தனிப்பட்டநபர்களுக்கும் மூலதனவடிவிலும் பொருள்வடிவிலும் அவர் அவர்களுக்கேற்ற வகையில் தொழில் அமையங்களை ஏற்படுத்திக்கொடுப்பதன்மூலமும், சமூகங்களுக்கிடையேகாணப்படும் குறைகளை நீக்குவதன் மூலமும் சமூகத்தினை ஒரு சமமான ஒருமட்டத்திற்குக் கொண்டுவர வழி கோலுகின்றது. இதஞல் சமூகத்தில் ஏழை, பணக்காரன், உயர்ந்தோன், தாழ்ந்தோன் என்ற ஏற்றத்தாழ்வு நீங்கி புதுப்பொலிவுடன் சமூகம் திகழ ஸகாத் எனும் நிதியம் எவ்வளவோ பயன்படுகின்றது.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த-ஷெப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியீட்ட திகதி: 6-12-1985

# விளையாட்டரங்கு

## ஆசிரியர் அணி வெற்றி

யாழ்ப்பாணம், டிச. 5
யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர் குழுவிற்கும், விடுதி மாணவ முதல்வர் குழுவிற்கும் இடையில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் ஆசிரியர் குழு வெற்றி பெற்றது.

நேற்று மாலை யாழ் இந்துக்கல்லூரி கரப்பந்தாட்ட களத்தில் இப்போட்டி நடைபெற்றது.

ஐந்துசுற்றுக்கள் நடைபெற இருந்த போதிலும் முதல் மூன்று சுற்றுக்களிலும் ஆசிரியர்கள் முன்னணியில் நின்று வெற்றியை தமதாக்கிக் கொண்டனர்..

கல்லூரி ஆசிரியர் அணிதக்ம் மாணவ முதல்வர் அணிக்கும் இடையிலான உதை பந்தாட்டப்போட்டி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

## மரம் நடும் விழா

திருநெல் வேலி டிக. 6
வேலணை சரஸ்வதி வித்தியாசாலையில் மரம் நடும் விழா அதிபர் திரு. ஆ. அருமைநாயகம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டமில்க்வைற்அதிபர் திரு. க. கனகராசா ஜே. பி நிழல் தரும் மரக்கன்றுகளை வித்தியாசாலை உட்புற சுற்றுடலில் நட்டு வைத்தார்.

ஐம்முனை அஞ்சலோட்டம்

## யாழ்ப்பாண கல்லூரி வெற்றியீட்டியது

யாழ்ப்பாணம் டிச6
சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற கல்லூரிகளுக்கு இடையிலான ஐம்முனை அஞ்சல் ஓட்டப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியின் புதிய மைதானம், புதிய பார்வையாளர் அரங்கு ஆகியவற்றின் திறப்பு விழா வைபவத்தை ஒட்டி நடைபெற்ற விளையாட்டு நிகழ்ச்சிகளின் ஓர் அங்கமாகவே இந்த அஞ்சலோட்டம் நடைபெற்றது.

அஞ்சலோட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி இரண்டாம் இடத்தையும், இளவாலை சென் ஹென்றிஸ் கல்லூரி மூன்றும் இடத்தையும் பெற்றன,

திறப்பு விழா வைபவத்தை ஒட்டி சென் பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரிய அணிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரிய அணிக்கும் இடையில் சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி ஒன்று நடைபெற்றது.

இவ்வாட்டத்திடல் இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டதால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர் குழுவின் தரப்பில் எம். ஏ. திலகரெட்ணமும் யாழ்ப்பாண கல்லூரி ஆசிரியர் அணியின் தரப்பில் எஸ். நித்தியரெட்ணமும் கோல் போட்டார்கள்.

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ஆட்டம்

## பாகிஸ்தான் அணி அபார ஆட்டம்

ராவல்பிண்டி டிச5
மேற்கிந்திய அணிக்கு எதிரான நான்கு ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி அபாரமாக விளையாடி வெற்றி பெற்றது.

இதன் மூலம், மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ஆட்டத் தொடரில் சமநிலை ஸ்தானத்தை பாகிஸ்தான் அணி பெற்றுக் கொண்டது.

ஐந்து ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரில் நான்கு ஆட்டங்கள் இதுவரை நடந்து முடிந்திருக்கின்றன. இந்த ஆட்டங்களில் இரு அணிகளும் தலா இரண்டில் வெற்றி பெற்றிருக்கின்றன.

நான்காவது ஆட்டம் நேற்று முன்தினம் ராவல்பிண்டியில் நடைபெற்றது.

போட்டித் தொடரின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் ஐந்தாவது (இறுதி) ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

## தமிழ்ப் பகுதி..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளிக் கிழமை டாக்காவில் சந்தித்துப் பேசுகிறுர் இந்தியப் பிரதமர் இரு ராஜீவ் காந்தி. அவ்வேளை மேற்கண்ட அம்சங்கள் அடங்கிய கூட்டணியின் மாற்று யோசனை ஜே. ஆரிடம் சமர்ப்பிக்கப்படும்.

இந்த மாற்று யோசனையில் உள்ள திட்டங்களையாவது செயற்படுத்த வேண்டும் என பிரதமர் ராஜீவ், இலங்கை ஜனுதிபதியிடம் வற்புறுத்துவார் எனவும் அறியப்படுகிறது.

அதனை இலங்கை அரசு ஏற்கும் பட்சத்தில் அரசாங்கத்தையும் கூட்டணியையும் நேராகப் பேசவைப்பதே பிரதமர் ராஜீவின் அடுத்த திட்டம் எனவும் அறியப்படுகிறது.

கொழும்பு உல்லாச ஹோட்டலில்

## பிரெஞ்சு இளம் பெண் மர்ம மரணம்

### கணவர் தற்கொலை முயற்சி

கொழும்பு, டிச.6
கொழும்பு உல்லாசப் பிரயாண ஹோட்டல் ஒன்றில் பிரான்ஸ் நாட்டு இளம் பெண் திடீர் மரணம் அடைந்தது குறித்து பகிரங்க தீர்ப்பு வழங்கப்பட்டது.

மனைவியின் மரணம் கேட்டு அதிர்ச்சி அடைந்த கணவன் சவரக் கத்தியினுல் தன்னை வெட்டி தற் கொலை செய்ய முயற்சித்தாராம்.

காயங்களுடன் அவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டார்.

இளம்தம்பதிகள் தங்கி இருந்த அறையினுள் போதை வஸ்து இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டது. சில்வியாவி சேவிஸ்டர் (26 வயது) என்ற இளம் பெண்ணின் மரணம் குறித்து மரண விசாரணை நடத்திய கொழும்பு திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. டி. இறிஸ்பீன், பகிரங்கத் தீர்ப்பு வழங்கிஞர்.

மரணத்தற்கான காரணங்களைத் தன்ஞல் தெரிவிக்க முடியாது என்று சட்ட வைத்திய அதிகாரி டாக்டர். எஸ் கொலம்பகே கூறியதைத் தொடர்ந்து பகிரங்கத் தீர்ப்பு வழ்ங்கப்பட்டது.

நேற்று வியாழக் கிழமை மரண விசாரணை நடத்தப்பட்டது.

## இடம் பெயர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரிக்கு இட மாற்றப்பட்டுள்ளன.

யாழ். கல்வித் திணைகளம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இது பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு, கிழ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாதையில் தலைமன்னர் நெல்லுக்குளம் வரையிலும்—

காங்கேசன்துறை கொழும்பு பாதையில் காங்கேசன்துறை முதல் வவுனியா வரையிலும்—

திருகோணமலை கொழும்பு பாதையில் திருகோணமலை முதல் கந்தளாய் வரையிலும்—

மட்டக்களப்பு கொழும்பு பாதையில் மட்டக்களப்பு முதல் வெலிக்கந்தை வரையிலும் உள்ள எல்லா ரயில் நிலையங்களிலும் காசுக் கட்டளை மூலமே இனிமேல் டிக்கெட் பெற்றுக் கொள்ள முடியும்.

காசுக் கட்டளைகள் பிரதமகணக்காளர்,ரயில்வே திணைக்களம் என்ற பெயருக்கு எழுதப்படவேண்டும்.

இப்புதிய நடைமுறை நாளை 7ஆம் திகதி முதல் அமுலாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

**Rajeevan Travels**

பாஸ்போட், பொண்ட், விசா, விமான ரிக்கற் அவசரகால பாஸ்போட் மற்றும் அனைத்துக்கும் உடன் தொடர்பு கொள்க.

**RAJEEVAN TRAVELS**
42, மணிக்கூட்டு வீதி
(குமம் வீடியோவுக்கு முன்பு)
யாழ்ப்பாணம்

**I.C.M.A May 1986**
Our Service To Finalise I.C.M.A In Jaffna
Contact
North Ceylon Technical Institute
**I.C.M.A**

| | | |
|---|---|---|
| FOUNDATION | STAGE A | DEC. 1st |
| | STAGE B | DEC. 15th |
| PROFESSIONAL | STAGE (i) | DEC. 15" |
| | STAGE (ii) | DEC. 28th |
| | STAGE (iii) | DEC. 28" |

Contact
North Ceylon Technical Institute
14, St. Peters Lane
(Opp.O.L.R.Church)
Hospital Road
JAFFNA
TELE
24355